# மட்டக்களப்புத் தமிழரது மரபுவழிப் பண்பாட்டுக் கூறுகள்

EASTERN
UNIVERSITY, SRI LANKA.
EXAMINATION BRANCH
3 1 JAN 2014
VANTHARUMOOLAI,
CHENKALADY.

**சாமித்தம்பி தில்லைநாதன்**
(EU/PGS/2008/Ac/Ph.D/04)

PhD01
Thesis
Library - EUSL

தமிழ்க்கலாநிதிப் பட்டத்திற்காக, கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை கலை கலாசாரப் பீடத்திற்கு இவ் ஆய்வேடு சமர்ப்பிக்கப்படுகிறது.

மொழித்துறை
கலை கலாசாரப்பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
வந்தாறுமூலை
இலங்கை
2013

PROCESSED
Main Library, EUSL
01

# உள்ளடக்கம்


உள்ளடக்கம் ............ i
நன்றியுரை ............ ix
ஆய்வுச் சுருக்கம் ............ xi
இயல் ஒன்று ............ 1
அறிமுகம் ............ 1
1.1. ஆய்வின் தலைப்பும் ஆய்வின் முக்கியத்துவமும் ............ 1
1.1.1. பண்பாடு ............ 1
1.1.2. பண்பாட்டை அறிவதன் முக்கியத்துவம் ............ 2
1.2. ஆய்வு நோக்கம் ............ 2
1.3. இலக்கிய மீளாய்வு ............ 3
1.3.1. இலங்கையில் தமிழரின் தொன்மை ............ 3
1.3.2. மட்டக்களப்பில் தமிழரின் தொன்மை ............ 7
1.3.2.1. மட்டக்களப்பின் வரலாறு கூறும் நூல்கள் ............ 7
1.3.2.2. மட்டக்களப்பு வரலாற்றில் தமிழரின் இடம் ............ 8
1.3.3. மட்டக்களப்பின் நில அமைவு எல்லைகள். ............ 9
1.3.4. மட்டக்களப்பு வாவிகள் ............ 10
1.3.5. மட்டக்களப்பின் புராதன ஆட்சிகள் ............ 11
1.3.5.1.அனுராதபுர, பொலநறுவை ஆட்சிகள் ............ 12
1.3.5.2. சோழராட்சி ............ 13
1.3.5.3.வன்னியர் ஆட்சி ............ 14
1.3.6 மட்டக்களப்பில் அன்னியர் ஆட்சி ............ 17
1.3.6.1. போர்த்துக்கேயர் ............ 17
1.3.6.2. ஒல்லாந்தர் ............ 18
1.3.6.3. ஆங்கிலேயர் ............ 20
1.4. கருதுகோள் ............ 21
1.5 ஆய்வு முறையியல் ............ 21
1.6 தகவல் திரட்டலும் பகுப்பாய்வும் ............ 23
1.7 ஆய்வின் இடர்ப்பாடுகள் ............ 23
1.8. ஆய்வின் கட்டமைப்பு ............ 24
இயல் இரண்டு ............ 25
மட்டக்களப்புத் தமிழர் சமூகமும் வரலாற்றுப்பின்னணியும் ............ 25
2.1. அறிமுகம் ............ 25
2.2. கர்ண பரம்பரைச் செய்திகள் ............ 25
2.3. நூலாதாரங்களும் வெளிநாட்டார் குறிப்புக்களும் ............ 26
2.4. தொல்பொருள் மற்றும் கல்வெட்டு ஆதாரங்கள் ............ 28
2.4.1. கல்வெட்டுக்கள் ............ 30
2.4.1.1. பூர்வ சாதிக்கல்வெட்டு ............ 30
2.4.1.2. சாதியியல் கல்வெட்டு ............ 31
2.4.1.3. போடி கல்வெட்டு ............ 31
2.4.1.4. பெரிய கல்வெட்டு ............ 32

2.4.1.5. பங்கு கூறும் கல்வெட்டு ....... 32
2.4.1.6. பாண்டியகுலவிருதுக் கல்வெட்டு ....... 32
2.4.1.7. சீர்பாதவரன்முறைச் செப்பேடு ....... 33
2.4.1.8. நாடு காடு பரவெணிக்கல்வெட்டு ....... 33
2.4.1.9. சாதித் தெய்வக் கல்வெட்டு ....... 33
2.5. ஆதிகாலக் குலங்கள் ....... 34
2.5.1 இயக்கர் ....... 34
2.5.2. நாகர் ....... 35
2.5.3. வேடர் ....... 35
2.6. மட்டக்களப்புத் தமிழரின் பிரதான குலமும் குடியும் ....... 39
2.6.1. திமிலர் ....... 41
2.6.2. முக்குவர் ....... 42
2.6.3. வன்னிமை ....... 43
2.6.4. வேளாளர் ....... 44
2.6.5. சீர்பாதர் ....... 46
2.6.6. கரையார் ....... 48
2.6.7. கோயிலார் ....... 50
2.6.8. தட்டார் ....... 51
2.6.9. செங்குந்தர் ....... 52
2.6.10. வேட வேளாளர் ....... 52
2.6.11. பண்டாரப்பிள்ளைகள் ....... 53
2.6.12. தனக்காரர் ....... 53
2.6.13. நளவர் ....... 53
2.6.14. வண்ணார் ....... 54
2.6.15. நாவிதர் ....... 54
2.6.16..பறையர் ....... 55
2.6.17. கடையர் ....... 56
2.7. சாராம்சம் ....... 56
இயல் 03 ....... 59
மட்டக்களப்புத் தமிழரது சமயப் பண்பாட்டு முறைகள் ....... 59
3.1. மட்டக்களப்பில் இந்து சமயம் ....... 59
3.1.1. மட்டக்களப்பின் புராதன ஆலயங்களும் நடைமுறைகளும் ....... 60
3.1.1.1. கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் கோயில் ....... 61
3.1.1.1.1. நிர்வாக முறை ....... 62
3.1.1.1.2. வருடாந்த உற்சவம் ....... 62
3.1.1.1.3. குடுக்கை கூறுதல் ....... 63
3.1.1.1.4. புதிர் எடுத்தல் ....... 63
3.1.1.1.5. புதிர் கொடுத்தல் ....... 63
3.1.1.1.6 புதிர் உண்ணல் ....... 63
3.1.1.1.7. மழைவேண்டி நேர்கடன் ....... 64
3.1.1.2. திருக்கோயில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் கோயில் ....... 64
3.1.1.2.1. நிருவாகம் ....... 65
3.1.1.2.2. தீர்த்தோற்சவம் ....... 65

3.1.1.3. மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் ........................................................ 65
3.1.1.3.1. கோயில் ஒழுங்கமைப்பும் பூசைமுறையும் ........................................ 66
3.1.1.3.2. மாலை கூறுதல் .................................................................. 66
3.1.1.4. கோயிற் போரதீவு சித்திர வேலாயுதர் கோயில் .................................... 67
3.1.1.4.1 கோயிலின் வருடாந்த உற்சவம் ...................................................... 68
3.1.1.5. பெரியபோரதீவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயில் ................................... 68
3.1.1.5.1. கோயில் வரலாற்றம்சமும் நிருவாகமும் ........................................... 68
3.1.1.5.2. வருடாந்த உற்சவம் .............................................................. 69
3.1.1.6. துறைநீலாவணைக் கண்ணகையம்மன் கோயில். ....................................... 69
3.1.1.6.1. அமைவிடம் ......................................................................... 69
3.1.1.6.2. வருடாந்தச் சடங்கு ............................................................... 70
3.1.1.6.3. வட்டா கூறுதல் ................................................................... 70
3.1.1.6.4. கோயிற் பரிபாலனம் ............................................................... 70
3.1.1.6.5. கணக்கப்பிள்ளை .................................................................. 71
3.1.1.7. பாண்டிருப்புத் திரௌபதையம்மன் கோயில். ........................................... 71
3.1.1.7.1. நிருவாக சபை ..................................................................... 72
3.1.2. மட்டக்களப்பிற்குச் சிறப்பாகவுள்ள வழிபாட்டு முறைகள் ................................ 72
3.1.2.1. மரவழிபாடு ......................................................................... 73
3.1.2.2. பத்ததி வழிபாடு ..................................................................... 75
3.1.2.3. தலயாத்திரை வழிபாடு ............................................................... 79
3.1.2.4. சுய வழிபாட்டு முறைகள் ........................................................... 81
3.1.2.4.1. வீடுகளில் சர்க்கரை அமுது ....................................................... 81
3.1.2.4.2. வீடுகளில் ஆட்டுச் சடங்கு ........................................................ 82
3.1.2.4.3. வேடர்களின் வழிபாட்டு முறை ..................................................... 83
3.1.3. நம்பிக்கைகள் ........................................................................ 84
3.1.3.1. இறை நம்பிக்கை ..................................................................... 85
3.1.3.2. ஊழ்வினையில் நம்பிக்கை ........................................................... 86
3.1.3.3. மருந்து மந்திரத்தில் நம்பிக்கை ...................................................... 86
3.1.3.4. அஞ்சனம் பார்த்தல் .................................................................. 88
3.1.3.5. சாத்திரம் கேட்டலில் நம்பிக்கை ..................................................... 92
3.1.3.6. சகுனம் பார்த்தலில் நம்பிக்கை ...................................................... 94
3.1.3.7. கனவில் நம்பிக்கை .................................................................. 96
3.1.3.8. கண்ணூறில் (கண்திருஷ்டியில்) நம்பிக்கை ......................................... 97
3.1.3.9. நோய் தீர்த்தலில் நம்பிக்கை ........................................................ 98
3.1.3.10. ஏனைய நம்பிக்கைகள் .............................................................. 98
3.2. மட்டக்களப்பில் கிறிஸ்தவ சமயம் ........................................................ 99
3.2.1. கத்தோலிக்க சமயம் ................................................................... 100
3.2.2. மெதடிஸ்த திருச்சபை ................................................................. 103
3.2.3. அங்கிலிக்கன் திருச்சபை. ............................................................. 105
3.2.4. கிறிஸ்தவர்களின் பண்பாடு ............................................................ 106
3.3. சாராம்சம் ................................................................................. 108
இயல் நான்கு ................................................................................. 111
மட்டக்களப்புத் தமிழரது சமூகப்பண்பாடுகள் ............................................... 111

4.1. சமூக வழமைகள் ....... 112
4.1.1. சீர்வரிசைகள் ....... 112
4.1.2. குலவிருதுகள் ....... 113
4.1.3. தனிமனித பொது நலசேவை ....... 113
4.1.4. சால்வை மூலம் மரியாதை ....... 114
4.1.5. சமூகவழமைச் சட்டம் ....... 114
4.1.5.1. மருமக்கட் தாய உரிமை ....... 115
4.2. வாழ்வியல் ....... 116
4.2.1. குடிமனை ....... 116
4.2.1.1. குடிமனை அமைப்பதிற் கடவுள் வழிபாடு ....... 117
4.2.1.2. புதுமனை புகும் நிகழ்வு ....... 117
4.2.2. குடிநீரும் கொட்டுக்கிணறும் ....... 118
4.2.3. சடங்குகள் ....... 119
4.2.3.1. பிறப்பு ....... 119
4.2.3.2. சாமர்த்தியச் சடங்கு ....... 121
4.2.3.2.1. முதல் விசளமும் முதல் முழுக்கும் ....... 121
4.2.3.2.2. கூரைமுடியும் கும்பமும் ....... 121
4.2.3.2.3. உணவு ....... 122
4.2.3.2.4. சடங்கு ....... 122
4.2.3.2.5. பலகாரம் பறித்தல் ....... 124
4.2.3.2.6. மஞ்சள் விளையாட்டு ....... 124
4.2.3.3. திருமணச் சடங்கு ....... 125
4.2.3.3.1. திருமண உறவு ....... 126
4.2.3.3.2. திருமண வகைகள் ....... 127
4.2.3.3.2.1. சாணைக்குறித் திருமணம் ....... 127
4.2.3.3.2.2. பேசிமுடிக்கும் திருமணம் ....... 127
4.2.3.3.2.3. காதல் திருமணம் ....... 128
4.2.3.3.3. திருமண நிகழ்வுகள் ....... 128
4.2.3.3.3.1. பொருத்தம் பார்த்தல் ....... 128
4.2.3.3.3.2. திருமணப்பேச்சு ....... 129
4.2.3.3.3.3. கேட்டுப் போதல் ....... 129
4.2.3.3.3.4. நாள் குறித்தல் ....... 130
4.2.3.3.3.5. சீதனம் ....... 130
4.2.3.3.3.6. கூறை உடுப்பு வாங்குதல் ....... 132
4.2.3.3.3.7. தாலிக்குப் பொன்னுருக்குதல் ....... 132
4.2.3.3.3.8. திருமண அழைப்பு ....... 133
4.2.3.3.3.9. பால் தப்புதலும் நீராட்டுதலும் ....... 134
4.2.3.3.3.10. மணமகனை அழைத்துவரச் செல்லல் ....... 134
4.2.3.3.3.11. மணமகனை வரவேற்றலும் திருமணச் சடங்குகளும் ....... 136
4.2.3.3.3.12. பால் பழம் பருகல் ....... 137
4.2.3.3.3.13. கலத்தில் போடுதல் ....... 138
4.2.3.4. மரணச்சடங்கு ....... 141
4.2.3.4.1. கூரைமுடி ....... 141

4.2.3.4.2. மரணவீட்டு நிகழ்வுகள் ........ 143
4.2.3.4.3. பறைமேளம் ........ 145
4.2.3.4.4. சுடலை நிகழ்வுகள் ........ 145
4.2.3.4.5. பிரேதம் அடக்கம் செய்த பின்னரான நிகழ்வுகள் ........ 147
4.2.3.4.6. வைகுந்த அம்மானை பாடுதல் ........ 148
4.2.3.4.7. எட்டாம் நாள் நிகழ்வு ........ 148
4.2.3.4.8. முப்பத்தியோராம் நாள் நிகழ்வு ........ 149
4.2.4. உணவுகளும் விருந்துபசாரமும் ........ 150
4.2.4.1. விருந்துபசாரம் ........ 152
4.2.5. பாவனைப் பொருட்கள் ........ 153
4.2.5.1. திருகை ........ 154
4.2.5.2. விளக்கு ........ 155
4.2.5.3. சமையலறைப் பொருட்கள் ........ 155
4.2.5.4. சிமிழ ........ 155
4.2.5.5. வெற்றிலைக் குட்டான் ........ 156
4.2.5.6. ஈர்க்கில் கட்டு ........ 157
4.2.5.7. மரக்கால் ........ 158
4.2.6. ஆடைஅணிகலன்கள் ........ 159
4.2.7. தொழில்கள் ........ 162
4.2.7.1. விவசாயம் ........ 164
4.2.7.1.1. உழவுத்தொழில் ........ 164
4.2.7.1.2. படி ........ 167
4.2.7.1.3. வட்டைக் காவல் ........ 167
4.2.7.1.4. நெல்லினங்கள் ........ 169
4.2.7.1.5. நீர்ப்பாசனம் ........ 170
4.2.7.1.6. பராமரிப்பு ........ 174
4.2.7.1.7. நெல்லும் கூலியும் ........ 174
4.2.7.1.8. நிருவாக முறை ........ 174
4.2.7.2. மந்தை வளர்ப்புத் தொழில் (கால் நடை வளர்ப்பு) ........ 176
4.2.7.3. மீன் பிடித்தொழில் ........ 180
4.2.7.4. சணல் நூல் தயாரித்தல் ........ 183
4.2.7.5. எண்ணெய் வாணிபம் ........ 184
4.2.8. பிரயாணங்கள் ........ 186
4.3. கல்வி ........ 187
4.4. சாராம்சம் ........ 189
இயல் ஐந்து ........ 192
மட்டக்களப்புத் தமிழரது கலைகள் ........ 192
5.1. கூத்துக்கலை ........ 192
5.1.1. மக்கள் வாழ்விற் கூத்துக்கலை ........ 192
5.1.2. தமிழகத்தில் கூத்து ........ 193
5.1.3. மட்டக்களப்பில் கூத்து ........ 194
5.1.4. வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் ........ 194
5.1.5. ஆடப்பெற்ற கூத்துக்கள் ........ 194

5.1.6. கூத்துக்களின் அமைப்பு ........ 195
5.1.7. கூத்திற் கையாளும் சொற்கள் ........ 195
5.1.8. கூத்துக்களரி ........ 195
5.1.9. இருமோடிக் கூத்துக்களின் வேறுபாடு ........ 196
5.1.10. மத்தளம் ........ 197
5.1.11. தாளக்கட்டு ........ 197
5.1.12. தாளக்கட்டும் ஆட்டமும் ........ 198
5.1.13. பாடல்களும் கதாபாத்திர அறிமுகம் செய்தலும் ........ 199
5.1.14. கட்டியகாரன் ........ 200
5.1.15. ஆடை அணிகள் ........ 200
5.1.16. சட்டம் கொடுத்தல் ........ 202
5.1.17. வெளிச்சம் ........ 202
5.1.18. அரங்கேற்றம் ........ 203
5.1.19. கூத்தும் திருமணமும் ........ 204
5.2. வசந்தன் ஆட்டம் ........ 204
5.2.1. பாடலும் ஆடலும் ........ 208
5.3. இசை ........ 209
5.3.1 பறை மேளக் கலை ........ 211
5.3.1.1. வாத்தியக் கருவிகள் ........ 211
5.3.1.2. தாளம் ........ 212
5.3.1.3. பாத்திரங்கள் ........ 212
5.3.2. குரவை ........ 213
5.4. விளையாட்டுக் கலை ........ 213
5.4.1. கொம்பு விளையாட்டு ........ 214
5.4.1.1. கட்சிப் பிரிவு ........ 214
5.4.1.2. உபகரணங்கள் ........ 214
5.4.1.3. கொம்பு ........ 214
5.4.1.4. பில்லி ........ 215
5.4.1.5. அடைகளும் ஆப்பும் ........ 215
5.4.1.6. நெஞ்சடிப் பலகை ........ 216
5.4.1.7. தாய் மரமும் செவ்வாய்க் குற்றியும் ........ 216
5.4.1.8. வளையம் ........ 216
5.4.1.9. அரிப்புக்கள் ........ 217
5.4.1.10. வடந்தாங்கி ........ 217
5.4.1.11. கொம்புத் தூது பிடித்தல் ........ 217
5.4.1.12. விளையாடும் கொம்பின் பருமன் ........ 217
5.4.1.13. பசையும் பில்லி கட்டுதலும். ........ 217
5.4.1.14. அரிப்பு வளைத்தலும் கொம்பு பூட்டுதலும் ........ 218
5.4.1.15. அடைகளும் ஆப்புக்களும் ........ 218
5.4.1.16. கொம்புகளைப் பொருத்துதலும் வடம் பூட்டுதலும். ........ 218
5.4.1.17. அடை பிடித்தலும் விளையாட்டின் வெற்றியும் ........ 218
5.4.1.18. ஆரம்ப நாளும் போர்த்தேங்காய் உடைத்தலும் ........ 220
5.4.1.19. ஊருலா ........ 220

5.4.1.20. தேரும் தேர்ப்புரையும்......221
5.4.1.21. ஏடகக் கொம்பு முறிப்பு......221
5.4.2. ஊஞ்சல் ஆடுதல்......222
5.4.3. கழங்காடல்......224
5.4.3.1. விளையாட்டு உபகரணம்......224
5.4.3.2. விளையாட்டு......224
5.4.4. மொச்சல் விளையாட்டு......225
5.4.5. கிட்டிப்புள்ளு......226
5.4.6. புள்ளுக்கிட்டி......227
5.4.7. வட்டக்காவடி......227
5.4.8. கிளித்தட்டு......228
5.4.9. பிள்ளையார் கட்டை......228
5.4.9.1. விளையாட்டு......229
5.4.10. கண்கட்டிப் பிடித்தல்......229
5.5. கரகாட்டம்......229
5.6. மகிடி நாடகம்......230
5.7. மருத்துவக் கலை......233
5.7.1. சித்தமருத்துவம்......233
5.7.2. விஷவைத்தியம்......234
5.7.2.1. மருந்தும் மந்திரமும்......234
5.7.2.2. சர்ப்பசாத்திர அறிவு......235
5.7.2.3. விஷநீக்கிகள்......235
5.7.2.4. அடக்கம் எழுப்புதல்......236
5.7.3. முறிவு வைத்தியம்......236
5.7.3.1. சுளுக்குகள்......236
5.7.3.2. மூட்டுக் களர்தல் அல்லது கீல் பிறழ்தல்......237
5.7.3.3. முறிவுகள்......237
5.7.3.4. மருந்து வகைகள்......237
5.7.4. மாட்டுவைத்தியம்......237
5.7.4.1.மாட்டுவாகடம்......238
5.7.4.2.நோய்கள்......238
5.8. சோதிடக் கலை......239
5.9. மந்திரக்கலை......240
5.10. கட்டடக்கலை......240
5.10.1. மச்சுவீடு......241
5.10.2. விளக்கு மாடம்......241
5.10.3. கூரையும் பிறவும்......241
5.10.4. கோயில்கள்......242
5.11. கண்கவர் கலைகள்......242
5.11.1. சிற்பக்கலை......243
5.11.2. ஓவியக்கலை......246
5.12. ஓலைச் சுவடிகளைத் தயாரித்தல்......247
5.12.1. ஓலைகளைப் பதமாக்குதல்......247

5.12.2. எழுத்தாணி ....................................................................................................248
5.12.3. எழுதும் முறை..................................................................................................248
5.12.4. முடிவுரை எழுதுதல் .........................................................................................249
5.12.5. துளையிடுதல்.....................................................................................................250
5.12.6. கரிய மை பூசுதல்.............................................................................................250
5.12.7. ஏட்டு உரு.........................................................................................................250
5.12.8. பெட்டகமும் நாற்காலியும்...............................................................................250
5.13. சாராம்சம்...............................................................................................................251
இயல் ஆறு.....................................................................................................................252
முடிவுரை.......................................................................................................................252
உசாத்துணை நூல்கள் ...................................................................................................257
நேர்காணல் விபரங்கள் ...................................................................................................267

# மட்டக்களப்புத் தமிழரது மரபுவழிப் பண்பாட்டுக் கூறுகள்

**சாமித்தம்பி தில்லைநாதன்**
மொழித்துறை
கலை கலாசாரப்பீடம்
கிழக்குப் பல்கலைக்ககழகம், இலங்கை

## ஆய்வுச் சுருக்கம்

ஈழவள நாட்டின் தொன்மையையும், பாரம்பரியங்களையும், இயற்கை வளங்களையும் தன்னகத்தே கொண்டமைந்த பிரதேசம் மட்டக்களப்பாகும். பண்டைக்காலம் முதல் இந்நிலம் வேற்று நிலங்களுடன் அதிகளவிலான தொடர்புகளற்று விளங்கியமையாற் போலும் பல தனித்துவமான பண்பாட்டுக் கோலங்களைக் கொண்டு ஒழுகிற்று. அந்நியராட்சியின் விருத்தியினாலும், அதற்குப் பிற்பட்டதான உலகமயமாதலின் மலர்ச்சியினாலும் அதன் பழம்பண்பாட்டுக் கூறுகள் படிப்படியாகத் திரிபடைந்து செல்வது கண்கூடு. இப்பழம்பண்பாட்டுக் கோலங்களிற் சில உருமாற்றம் பெற்றுள்ளன. பல வழக்கொழிந்து போய்விட்டன. எஞ்சிய ஒரு சிலவேதான் இன்னல்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு சமுதாயமும் தமது தனித்துவமான பண்பாடுகள் காலவெள்ளத்தில் அள்ளுண்டு போகாவண்ணம் காப்பது அதன் கடமையாகும். இதன் பொருட்டுத் தனது பழம்பண்பாட்டுக் கோலங்களை ஆவணப்படுத்தி அதனைத் தமது எதிர்காலச் சந்ததிக்குரிய முன்னோரது வழிகாட்டியாகப் பேணுதலும் அதன்படி ஒழுகுதலுக்கு ஊக்குவித்தலும் ஒவ்வொரு சமுதாயத்துக்கும் வேண்டற்பாலதொன்றாகும். அன்றேல் இத்தனித்துவமான பண்பாடுகள் எல்லாம் நாட்செல்லச்செல்ல பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போய்விடும்.

இந்த வகையில் இந்த ஆய்வானது மட்டக்களப்புத் தமிழரிடையே பண்டு தொட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை நிலவிவந்த மரபு வழிப் பண்பாட்டுக் கூறுகளை ஆவணப்படுத்தலை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு மட்டக்களப்புத் தமிழரின் வரலாற்றுப் பின்னணி, சமய சமூகப் பண்புகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றின் ஊடாக மட்டக்களப்புத் தமிழரது மரபுவழிப் பண்பாட்டுக் கூறுகள் பற்றி ஆய்வு செய்கிறது.

இவ்வாய்வானது வரலாற்று ரீதியான பகுப்புமுறை மற்றும் விளக்கமுறை ஆய்வாகும். இவ்வாய்வின் முதன்மை மூலங்களாகக் கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், நூல்கள் என்பனவும், துணை மூலங்களாகக் கள ஆய்வு, பேட்டிகள், ஆய்வுக் கட்டுரைகள் என்பனவும் கொண்டு அவற்றில் இருந்து பெறப்பட்ட தரவுகளைத் தர்க்க ரீதியில் ஆய்வு செய்து பெறப்பட்ட முடிவினை வெளிக் கொணர்வதாகும்.

இவ்வாய்விற் பெரும்பாலான தரவுகள் நூல்களிற் பெறமுடியாதன. ஆகவே, மட்டக்களப்பின் பல பாகங்களிலுமுள்ள இத்துறைசார்ந்த அனுபவமும் அறிவுமுள்ள பெரியார்களின் தொடர்பை ஏற்படுத்தி, அவர்கள் மூலமாய் பண்பாட்டுத் தரவுகள் சேர்க்கப்பெற்றன.

மட்டக்களப்புத் தமிழரது வரலாற்றுப் பின்னணியை கல்வெட்டுகள், வரலாற்று நூல்கள், கர்ணபரம்பரைச் செய்திகள், வெளிநாட்டார் குறிப்புகள் போன்ற இன்னோரன்னவைகள் மூலமாக எடுத்துக்காட்டமுடிகிறது. மட்டக்களப்பின் ஆதிவாசிகள் இயக்கர், நாகர், வேடர் ஆகியோர் எனவும் ஏனையவர்கள் காலத்துக்குக் காலம் பல நோக்கங்களுடன் வந்து குடியேறியோர் எனவும் அறியமுடிகிறது. மட்டக்களப்புத் தமிழரது வரலாற்றில் மட்டக்களப்பு வாவி முக்கிய இடத்தைக் வகிக்கிறது.

மட்டக்களப்பின் பெரும்பாலான நிலப்பரப்பு நீரினாற் சூழப்பெற்று இடையிடையே ஆற்றிடை மேடுகளைக் கொண்டிருந்ததால் அது மக்களது வாழ்நிலமாகியது. புராதன காலத்தில் அரசனின் மேலாதிக்கத்தின் கீழ் வன்னியர் என்னும் சிற்றரசர் மட்டக்களப்புப் பிரதேசத்தைச் சுதந்திரமாக அரச பரிபாலனம் செய்ததாக அறியமுடிகிறது. சாதிகளாக, குடிகளாக வாழத்தலைப்பட்ட மட்டக்களப்புத் தமிழர் தமது வாழ்வியற் கருமங்களில் ஊழியங்களையும் தொழும்புகளையும் பகிர்ந்து வாழ்வியலை நடத்திவந்துள்ளனர்.

மட்டக்களப்புத் தமிழரது சமயங்களாக இந்து சமயமும் கிறிஸ்தவ சமயமும் உள்ளன. மட்டக்களப்பில் உள்ள இந்துக் கோயில்களில் சில புராதன கோயில்களினூடாக மட்டக்களப்புத் தமிழரது மரபுவழிப் பண்பாடுகள் ஆராயப்பட்டுள்ளன. இங்கு நிலவும் இந்து சமய வழிபாட்டு முறைகளில் பத்ததி, சுயவழிபாட்டு முறைகள் நீண்ட காலமாக இருந்து வருகின்றன. மட்டக்களப்புத் தமிழரது வாழ்வியலின் உயிர் நாடியாக விளங்குவது அவர்களிடமுள்ள நம்பிக்கை. அவர்களிடமுள்ள நம்பிக்கைகளெல்லாம் ஆன்மீகத் தொடர்பு கொண்டவையாகும்.

போர்த்துக்கீசர் முதலான மேனாட்டார் வருகையோடு மட்டக்களப்புத் தமிழரிடையே கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்டது. இவர்களது வருகையால் சுதேசிகளுக்கு கேடுகள் ஏற்பட்டாலும் சமய பண்பாட்டு ஊடாட்டங்களினால் புதிய எழுச்சியும் உருவாகியது. மட்டக்களப்புத் தமிழரிடம் காணப்படும் கலைகள் அவர்களது மரபுவழிப் பண்பாடு காட்டும் ஊடகமாக உள்ளன.

மட்டக்களப்புத் தமிழரின் மரபுவழிப் பண்பாட்டினை அறியும் பொருட்டாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக் கட்டுரை பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டது. அவற்றில் பெரும்பாலானவை உதாரணங்களோடு விரிவுபடுத்தி விளக்கப்படவேண்டியவை. எனினும் இக்கற்கை நெறிச் சபையாரின் அறிவுறுத்தலுக்கமைய ஆய்வுக் கட்டுரையின் பக்கங்கள் 250 க்கும் 300 க்கும் இடையில் முடிவுறவேண்டியதனால் சுருக்கமாக அமைந்துள்ளது.